## 2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு

அட்டவணை 06 ஆனது 2014 இல் அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செய்யப்பட்ட பங்களிப்பு மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் போக்குகளையும் காட்டுகின்றது. வரைபு 04 ஆனது இத்தகைய பங்களிப்புக்களையும் விபரிக்கின்றது. 2016 இல் மொத்த அரசாங்க வருமானமானது ரூபா 1,686,061 மில்லியனுக்கு (நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கை –2016) அதிகரித்துள்ளதுடன், மொத்த அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து38.05% பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதையும் பதிவு செய்துள்ளது

உள்நாட்டு மொத்த உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமானது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்துள்ளதுடன், 2016 இல் 5.42% வீதத்தினைக் காட்டியுள்ளது. வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான வரி வீதங்களின் அறிமுகமானது விகிதாசார வீழ்ச்சிப் போக்கிற்கு காரணமாக அமையலாம்.

| அட்டவணை 06 – அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும் பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | அரசாங்க வருமானம்ரூபா மில்.* | உ.இ.தி. சேகரிப்புரூபா மில். | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு % | பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் ரூபா மில்.** | மொ.உ.உ. உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு விகிதாசாரம் |
| 2012 | 1,051,461 | 443,456 | 42.18% | 7,582,376 | 5.85% |
| 2013 | 1,137,447 | 492,539 | 43.30% | 8,674,230 | 5.68% |
| 2014 | 1,195,206 | 514,161 | 43.02% | 9,784,672 | 5.25% |
| 2015 | 1,454,878 | 560,422 | 38.52% | 11,183,220 | 5.01% |
| 2016 | 1,686,061 | 641,547 | 38.05% | 11,838,975 | 5.42% |

மூலம்: - * நிதி திட்டமிடல் அமைச்சு(ஆண்டறிக்கை) **இலங்கை மத்திய வங்கி(ஆண்டறிக்கை)



## 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

வரி செலுத்துனர்கள் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நேரத்தில் வரி விபரத்திரட்டுக்களை நிரப்பி வரி செலுத்துவதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது, குறித்த ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. சிறப்புரிமை அட்டைகளை (தங்கம் மற்றும் வெள்ளி) பரிசளித்தல், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது வரிச் சலுகைகளை வழங்குதல், முன்கூட்டிய வரிக் கொடுப்பனவுகள் மீது கழிவுகள் வழங்குதல் போன்ற சுய இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் தனிநபர் வரி செலுத்துனர்களுக்கு பயனளிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்ந்தும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கிணங்க, 2015/2016 வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் உரிய திகதியிலுள்ள நிறுவனமல்லா வருமான வரி விபரத்திரட்டுக்களை கோவைப்படுத்தும் வீதாசாரமானது48% ஆகஇருந்துள்ளதுடன்,குறித்த காலப்பகுதியிலிருந்தான ஒரு மாத காலப்பகுதியினுள் இது 59% இற்கு அதிகரித்திருந்தது. உரிய திகதியிலிருந்து இரண்டு மாதங்களின் பின்னரான இணக்கப்பாட்டு வீத வரியானது நிறுவனத் துறையில் 68% இல் இருந்துள்ளது.

நிறுவன துறையினைப் பொறுத்தவரையில், உரிய திகதியில் 30% ஆக இருந்துள்ளதுடன், உரிய திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் 46% ஆகவும் இருந்துள்ளது. நிறுவன வரி வீதமானது உரிய திகதியிலிருந்தான இரண்டு மாதங்களிலுள்ளான இணக்கப்பாட்டு வீத வரியானது 48% இல் இருந்துள்ளது.

அனைத்து வரிகளினதும் விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதமானது சுய வரி மதிப்பீட்டு முறைமையில் எதிர்பார்க்கப்படாத மட்டமொன்றினூடாகவேனும் பெரும்பாலும் நிலையானதாக இருந்துள்ளது. எவ்வாறாயினும், விபரத்திரட்டு இணக்கப்பாட்டினை அடைவதற்கான நடவடிக்கைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டிலுள்ள தேசக் கட்டுமான வரி வீதத்திலும் கணிசமான வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. குறித்த ஆண்டு காலப்பகுதியில், திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கள மதிப்பாய்வின் கீழ் தேசக் கட்டுமான வரியுடனான 75,811 புதிய வரி செலுத்துனர்கள் பதிவு செய்யப்பட்டார்கள்.இத்தகைய வீழ்ச்சிக்கான காரணமாக விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிப்பது தொடர்பில் அத்தகைய வரி செலுத்துனர்கள் சரியான புரிந்துணர்வினைக் கொண்டிருக்காமையினைக் காரணமாக குறிப்பிடலாம். அட்டவணை 07 ஆனது கொடுப்பனவுத் திகதியிலுள்ளதும், 2011/2012 இலிருந்து 2015/2016 வரையிலான ஆண்டுகளின் கொடுப்பனவுத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள்ளானவருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாட்டினையும் காட்டுகின்றது. அட்டவணை 08 ஆனது ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதங்களினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 07– வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு 2011/2012 –2015/2016**

| வரி மதிப்பீட்டாண்டு | துறை | முடிவுத் திகதி மீதான இணக்கப்பாடு | முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள்ளான இணக்கப்பாடு |
|---|---|---|---|
| 2011/2012 | நிறுவனம் | 56% | 60% |
| | நிறுவனமல்லாத | 39% | 48% |
| 2012/2013 | நிறுவனம் | 56% | 70% |
| | நிறுவனமல்லாத | 41% | 54% |
| 2013/2014 | நிறுவனம் | 53% | 61% |
| | நிறுவனமல்லாத | 42% | 57% |
| 2014/2015 | நிறுவனம் | 52% | 58% |
| | நிறுவனமல்லாத | 47% | 62% |
| 2015/2016 | நிறுவனம் | 30% | 46% |
| | நிறுவனமல்லாத | 48% | 59% |

| அட்டவணை 08 – ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | பெசேவ | பொசேக | தேகவ | உபொசெவ | |
| 2014ஆண்டு | 49% | 71% | 84% | வரி மதிப்பீட்டாண்டு2013/2014 | 55% |
| 2015ஆண்டு | 65% | 68% | 86% | வரி மதிப்பீட்டாண்டு 2014/2015 | 63% |
| 2016ஆண்டு | 71% | 79% | 31% | வரி மதிப்பீட்டாண்டு2015/2016 | 57% |

## 2.9. வருமான வரி சேகரிப்பு

கூட்டிணைவு வருமான வரி, தனிநபர் வருமான வரி, பங்கிலாப வரி மற்றும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி என்பன உள்ளடங்கலான நிறுவன வருமான வரி என்பவற்றிலிருந்தான வருமான சேகரிப்பானது 2016 இல் ரூபா 238,398 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இது 2015 இல் சேகரிக்கப்பட்ட ரூபா 256,435 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 7.03% வீழ்ச்சியாகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான வரி சேகரிப்பானது அதன் மொத்த வருமானத்தில் 37.16% ஆகும். இது 2015 இல் 45.76% ஆக இருந்துள்ளது. 2015 ஆம் ஆண்டிற்கான வருமான வரி சேகரிப்பினுள் 2015 இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அதி ஈட்ட வரி சேகரிப்பான ரூபா.49 மில்லியனையும் கொண்டுள்ளது. ஏற்றுமதிகள், மின்சக்தி பிறப்பாக்கம் மற்றும் உள்ளக கட்டமைப்பு விருத்தி என்பனவற்றினை ஊக்குவிப்பதற்காக அண்மைக் காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள் மற்றும் சலுகை வீதங்கள் என்பனவும் வருமான வரியிலிருந்தான வருமானக் குறைவுக்கு காரணமாக அமையலாம்.

### 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம்

மொத்த வருமான வரி சேகரிப்புக்கானநிறுவன துறையிலிருந்தான பங்களிப்பானது சேகரிக்கப்பட்ட மொத்த வருமான வரியில் ரூபா 144,134 மில்லியன் அல்லது 60% ஆகும். நிறுவனமல்லா துறையானது ரூபா 94,265 மில்லியனை அல்லது 40% பங்களிப்பினை வழங்கியுள்ளது.
அட்டவணை 09 அதன் பொழிப்பினைக் காட்டுவதுடன் வரைபு 05 அது தொடர்பில் விபரிக்கின்றது.

| அட்டவணை 09 : - நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி சேகரிப்பு – 2015 & 2016 | | | | |
|---|---|---|---|---|
| | 2016 | | 2015 | |
| | வரி சேகரிப்பு (ரூபா) | % | வரி சேகரிப்பு (ரூபா) | % |
| **நிறுவனம் *** | 144,133,758,898 | 60% | 155,870,960,759 | 61% |
| **நிறுவனமல்லாத **** | 94,264,851,743 | 40% | 100,563,979,780 | 39% |
| **மொத்தம்** | **238,398,610,641** | **100%** | **256,434,940,539** | **100%** |

* 2015 இல் 12,340 மில்லியன் மற்றும் 2016 இல் 15,902 மில்லியன் பங்கிலாப வரிகள் உள்ளடங்கலாக

**உழைக்கும் போது செலுத்தும் வரித் திட்டத்தின் (PAYE) கீழ் ஊழியர்களினால் செலுத்தப்படும் வருமான வரி மற்றும் கூட்டிணைவுத் துறையினால் அளிக்கப்பட்ட வட்டி வருமான சேவைகளிலிருந்து கழிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி உள்ளடங்கலாக.

வரைபு 05
ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணையாத வருமான வரி சேகரிப்பு
2015 & 2016




### 2.9.2 மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு

அட்டவணை 10 ஆனது குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி பகுப்பாய்வின் பொழிப்பினை (ஊழியம் மற்றும் ஏனையவை) காட்டுகின்றது.

| அட்டவணை 10 - வருமான வரி சேகரிப்பு - 2016 | | |
|---|---|---|
| **மூலம்** | **சேகரிப்பு(ரூ.மில்.)** | |
| **ஊழியம்** | | |
| உ.பொ.செ.வரி திட்டம் | 27,717.03 | |
| தவறுகையிலுள்ள வரிக்கான தண்டப்பணம் பற்றிய மதிப்பீடுகள் | 481.09 | **28,198.12** |
| **ஏனையவை** | | |
| சுய மதிப்பீடு மற்றும் தண்டப் பணம் பற்றிய மதிப்பீடுகள் | 132,060.87 | |
| ஆண்டுக் கட்டணங்கள், வேத்துரிமைக் கட்டணங்கள் அல்லது முகாமைத்துவக் கட்டணங்களின் கொடுப்பனவுகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி | 55,906.76 | |
| பிற மூலத்தின் கழிப்பனவு | 22,297.55 | |
| **மொத்த சேகரிப்பு** | | **238,463.30** |
| கழி: மீளளிப்பு | | (64.69) |
| **தேறிய சேகரிப்பு** | | **238,398.61** |

நிறுத்தி வைத்தல் வரி முறைமையினுள் உள்ளடங்காத வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில், வாழ்க்கைத் தொழில் மற்றும் ஏனைய சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்ற தண்டப் பணங்களினுடனான சுய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலமான தொகை ரூபா 132,061 ஆகும்.

## 2.10. பெறுமதி சேர்வரி சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பானது ரூபா முன்னைய ஆண்டுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 214,236 மில்லியனுடன் உடன் ஒப்பிடுகையில் 24.42% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. குறித்த ஆண்டுக்கான மதிப்பீடான ரூபா.270,000 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டுக்கான வருமானமானது ரூபா 13,451 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. .

பதிவு செய்தலுக்கான வரி எல்லைக் குறு மட்டத்தினைக் குறைத்தல், பெசேவ வீதத்தினைக் அதிகரித்தல், குறித்த சில விலக்களிப்புக்களினை நீக்குதல் மற்றும் RAMIS கருத்திட்டத்தின் கீழ் நிருவாக முறையிலான மாற்றங்களை அமுல்படுத்துதல் என்பன பெசேவ வருமானத்தினை அதிகரிப்பதற்கு துணை புரிந்துள்ளன. உள்நாட்டு வழங்கல்கள் மற்றும் இறக்குமதிகளின் மீது சேகரிக்கப்பட்ட பெசேவ ஆனது முன்னைய ஆண்டுக்கெதிராக அதிகரிப்பினைக் காட்டுகின்றது. குறித்த ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு பெசேவ 168,115 மில்லியனாகும். இத் தொகையானது 2015 ஆம் ஆண்டுக்கான பெறுமதி சேர் வரியான ரூபா 130,510 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 37,604 மில்லியன் அதிகமாகும். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீது சேகரிக்கப்பட்ட பெசேவ ரூபா.83,726 மில்லியனாக இருந்துள்ளதுடன் 2016 இல் இது ரூபா.115,336 மில்லியனாக இருந்துள்ளது.

அட்டவணை II ஆனது 06 ஆம் வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மீளளிப்புக்கள் மற்றும் தேறிய சேகரிப்பு என்பவற்றின் துறை வாரியான மொத்தத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 11 – பெறுமதிசேர் வரி மொத்த சேகரிப்பும் மீள் கொடுப்பனவுகளும்**

| துறை | 2015 | | 2016 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | | மொத்த சேகரிப்பு (ரூபா மில்.) | | மீளளிப்பு | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | |
| **உற்பத்தித் துறை** | | 28,894.52 | | 35,853.69 | 440.78 | | 35,412.91 |
| **உற்பத்தியல்லா துறை** | | | | | | | |
| -சேவைகள் | 73,719.51 | | 96,670.13 | | 64.51 | 96,605.62 | |
| -நிதியியற் சேவைகள் | 27,896.35 | | 36,096.75 | | | 36,096.75 | |
| -விருப்பு பெசேவ | 0.17 | 101,616.03 | | 132,766.88 | | | 132,702.37 |
| **இறக்குமதிகள்** | | 83,726.43 | | 115,336.71 | 0.48 | | 115,336.23 |
| **மொத்தம்** | | **214,236.98** | | **283,957.28** | **505.77** | | **283,451.51** |



| அட்டவணை 12 –மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| துறை | 2015 | | 2016 | | மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம் | |
| | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | 2014 | 2015 |
| உற்பத்தித் துறை | 28,894,521,159 | 13.49% | 35,412,908,090 | 12.49% | 0.26% | 0.29% |
| உற்பத்தியல்லா துறை | 101,616,031,540 | 47.43% | 132,702,369,902 | 46.82% | 0.91% | 1.12% |
| இறக்குமதிகள் மீதான | 83,726,432,785 | 39.08% | 115,336,235,788 | 40.69% | 0.75% | 0.97% |
| **மொத்தம்** | **214,236,985,484** | **100.00%** | **283,451,513,780** | **100.00%** | **1.92%** | **2.39%** |

## 2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு

| அட்டவணை 13 – பெ.சே.வரி உள்ளூர் மொத்தம் – உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| Sector | 2014 (ரூபா மில்.) | 2015 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % | 2016 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % |
| வங்கித்தொழில் | 18,822 | 23,089 | 22.67% | 27,770 | 20.27% |
| காப்புறுதி | 4,910 | 5,403 | 10.04% | 6,371 | 17.92% |
| ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதி | 6,507 | 7,429 | 14.17% | 10,566 | 42.23% |
| நிர்மாணம் | 6,943 | 6,605 | -4.87% | 8,230 | 24.60% |
| மின்சாரம் மற்றும் வாயு | 560 | 501 | -10.54% | 526 | 4.99% |
| இறக்குமதிகள் | 10,389 | 9,880 | -4.90% | 9,383 | -5.03% |
| நிதியளிப்பு | 13,982 | 18,487 | 32.22% | 20,242 | 9.49% |
| தொடர்பாடல் | 394 | 376 | -4.57% | 7,429 | 1875.80% |
| பெற்றோலிய உற்பத்தி | 1,509 | 417 | -72.37% | 175 | -58.03% |
| குடிவகையும் மதுபானமும் | 9,930 | 396 | -96.01% | 1,553 | 292.17% |
| வகைப்படுத்தப்படாத சேவைகள் | 9,866 | 12,295 | 24.62% | 39,690 | 222.81% |
| வகைப்படுத்தப்படாத உற்பத்திகள் | 10,280 | 9,173 | -10.77% | 29,079 | 217.01% |
| ஏனையவை | 42,408 | 36,460 | -14.03% | 36,091 | -1.01% |
| **மொத்தம்** | **136,500** | **130,511** | **-4.39%** | **197,105** | **51.03%** |

### 2.10.2 பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு பெசேவ சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. **பெறுமதிசேர் வரி மீளாய்வு**

நிதிச் சேவைகள் உள்ளடங்கலான பொருட்கள் சேவைகளின் வழங்கல் மீதான பெசேவ வீதம் பின்வருமாறு மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

| காலப்பகுதி | வீதம் |
|---|---|
| 02.05.2016 இலிருந்து 11.07.2016 வரை | 15% |
| 12.07.2016 இலிருந்து 31.10.2016 வரை | 11% |
| 01.11.2016 இலிருந்து ஏதேனுமொரு காலப்பகுதிக்கு | 15% |

ii. **பெசேவ பதிவு செய்தலுக்கான வரி எல்லைக் குறுமட்டம்**

அ. 2016 ஏப்பிரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனுமொரு காலப்பகுதிக்கு, மொத்த வியாபாரம் அல்லது சில்லறை விற்பனை தவிர்ந்த ஆனால் நிதிச் சேவைகள் உள்ளடங்கலான ஏதேனும் வரி விதிக்கத்தக்க செயற்பாடு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆளொருவரினால் பதிவு செய்தலுக்குப் பொறுப்பாகக்கூடிய எல்லையானது மூன்று மாத வரி விதிக்கத்தக்க காலப்பகுதிக்கு 03 மில்லியனுக்கும் அல்லது 12 மாத காலப்பகுதிக்கு 12 மில்லியனுக்கும் குறைக்கப்பட்டுள்ளது.

ஆ. கலண்டர் மாதமொன்றின்உடனடுத்து வரும் ஏதேனும் 3 மாதங்களுக்கு மொத்த வியாபாரம் அல்லது சில்லறை விற்பனை பெசேவ பதுவு செய்தலுக்கான எல்லைக்குறுமட்ட பொறுப்பானது 2016 நவம்பர் 01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் ரூபா.100 மில்லியனிலிருந்து ரூபா. 12.5 மில்லியனுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

iii. மொத்த வியாபாரம் அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆளினால் விலக்களிப்புப் பெற்ற பொருட்களின் வழங்கல் தொடர்பான கருதப்பட்ட பெசேவ பொறுப்பானது 2016 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து நீக்கப்பட்டது.

iv. கருதப்பட்ட உள்ளீட்டுப் பெசேவ ஆனது வழங்கல் எல்லைக் குறுமட்டத்தின் குறைப்பு காரணமாக மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபார வகையீட்டின் கீழ் 2016 மே 02 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் அல்லது பதிவு செய்து கொண்ட ஆட்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது:

- திவு செய்யப்படாத ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், பெசேவரிக்குப் பொறுப்பாகக்கூடிய பொருட்களின் மீது;
- 2016 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக ஆனால் 2016 மே 2 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் திகதியில் இடம்பெற்ற அத்தகைய பதிவு செய்தலாயின், பெறுமதி சேர் வரிப் பதிவு செய்தல் திகதியில் விற்கப்படாது எஞ்சியுள்ள பெசேவரிக்குப் பொறுப்பாகக்கூடிய விற்பனை செய்யத்தக்கதான பொருட்களின் இருப்பின் (ஏதேனும்) மீது.

v. ஏற்றுமதி நோக்கிலான ஆடைக் கம்பனிகளினால் கீழே நிரல்படுத்தப்பட்டவாறு ஆடை அல்லது துணைகளின் மீது அறவிடப்படும் மூலக்கூறு வரி (சுங்கத்தில் விதிக்கப்பட்ட பெசேவ, தேகவ மற்றும் ஏனைய வரிகளின் சேர்க்கை), ரூபா 75/- இற்கு அதிகரிக்கப்பட்டது.

அ. இலங்கை முதலீட்டுச் சபை / சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் அனுமதி யளிக்கப்பட்டவாறு ஏற்றுமதி நோக்கிலான ஆடை வடிவமைப்புக் கம்பனிகளினால் உள்நாட்டில் வழங்கப்படும் ஆடைகள்;

ஆ. இலங்கை முதலீட்டுச் சபை / சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் அனுமதி யளிக்கப்பட்டவாறு அத்தகைய கம்பனிகளினால் உள்நாட்டில் வழங்கப்பட்ட துணிகள் அல்லது பின்வரும் துணியினாலான உற்பத்திகள்:

- கிலோகிராமொன்றிற்கான / லினன் அல்லது திரைச்சீலைகள்;
- துவாய் கிலோகிராமொன்றிற்கு;
- துணியினால் செய்யப்பட்ட பைகள் / உருப்படியொன்று;
- இரண்டு மீற்றர்கள் / கிலோகிராமொன்றிற்கு மேற்படாத வெட்டுத் துணிகளின் ிகை
- வேறு ஏதேனும் துணி வகை / கிலோகிராமொன்றிற்கு

vi. சாதாரண பெசேவஇன் கீழ் வரி விதிப்பனவுக்குப் பொறுப்பாகக் கூடியதும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியிலிருந்து நீக்கப்படுவதுமான ஏதேனும் தொழிற்படு குத்தகை உடன்படிக்கையின் கீழான குத்தகை வசதிகளின் வழங்கல்

vii. 2016 மே 02 இலிருந்து 2016 ஜூலை 11 வரையிலான காலப்பகுதிக்குரியதும் 2016 நவம்பர் 11 இலிருந்து பயனுறுதியாகின்றதுமான ஏதேனுமொரு காலப்பகுதிக்கு பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடையவற்றிற்குப் பின்வரும் விலக்களிப்புக்கள் அளிக்கப்பட்டன:

- தொலைத் தொடர்பு சேவைகளின் வழங்கல்;
- தொலைத்தொடர்பு கைத்தொழிலுக்கான செப்புக் கம்பிகளின் வழங்கல் உள்ளடங்கலான தொலைத் தொடர்பு உபகரணம் அல்லது இயந்திரம், உயர் தொழில்நுட்ப உபகரணங்களின் இறக்குமதி அல்லது வழங்கல்;
- தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் உள்நாட்டு தொலைத்தொடர்பு தொழிற்பாட்டளர்களுக்கான உரிமத்தினை வழங்குதல்;
- ருத்துவ நிறுவனம் அல்லது தொழில்சார் தகைமையினைக் கொண்டுள்ள ஆளொருவரினால் அளிக்கப்ப்படும் சுகாதார நலன்பேணல் சேவைகளின் வழங்குகை (நோயினைக் கண்டறியும் சோதனைகள், இரத்தச் சுத்திகரிப்பு, வெளிநோயாளர் பிரிவினால் அளிக்கப்படும் சேவைகள் தவிர்ந்தவை).
- வீடமைப்பு கருத்திட்டங்கள் தவிர்ந்த 2016.05.02 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்திற்கான பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல்.

viii. ின்வரும் விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டுள்ளதுடன் 2016 நவம்பர் 01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடைய அத்தகைய வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.:

- ால் மாவின் இறக்குமதி அல்லது வழங்கல்;
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பசும்பாலில் சீனி அல்லது ஏனைய இனிப்பூட்டும் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்ட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால் மாவின் வழங்கல்;
- ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் அல்லது லக் சதொசவினால் அளிக்கப்பட்ட ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் (விலக்களிப்புப் பெற்ற பொருட்கள் அல்லது சேவைகள்) வழங்கல்;
- சிகரட்டுக்களின் இறக்குமதி அல்லது வழங்கல்;
- துபானங்களின் இறக்குமதி அல்லது வழங்கல்;
- இலகு மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல்
- வாசனைத் திரவியங்களின் இறக்குமதி அல்லது வழங்கல்;
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆபரணங்களின் வழங்கல்;
- காரியத்தின் இறக்குமதி அல்லது வழங்கல்;
- இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் புகையிரத திணைக்களத்தினால் பிரத்தியேகப் ாவனைக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல்; மற்றும்
- வதிவிடத்திற்கான குத்தகை அல்லது வாடகை (நீண்டகால குத்தகை உள்ளடங்கலாக)

## 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான தேசக் கட்டுமான வரி சேகரிப்பானது மொத்த வருமானத்திற்கு ரூபா 84,066 மில்லியனை பங்களிப்புச் செய்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23.79% அல்லது ரூபா 16,155 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. மொத்த தேசக் கட்டுமான வரி வருமானத்தில் ரூபா 26,642மில்லியன் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

**அட்டவணை 14 – தேசக் கட்டுமான வரி சேகரிப்புப் பகுப்பாய்வு – 2016**

| துறை | தேறிய சேகரிப்பு (ரூபா) | |
|---|---|---|
| | 2015 | 2016 |
| உற்பத்தி | 10,163,343,792 | 13,526,495,655 |
| சேவைகள் | 31,256,204,685 | 42,076,837,588 |
| இறக்குமதிகள் | 26,491,513,723 | 28,463,193,481 |
| **மொத்தம்** | **67,911,064,215** | **84,066,526,724** |

அட்டவணை 15 ஆனது 2015 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் தேசக் கட்டுமான வரி வருமான மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்கின்றதுடன், 2016 ஆம் ஆண்டின் பின்னர் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானத்தினையும் குறிப்பிடுகின்றது.

**அட்டவணை 15 – தேசக் கட்டுமான வரி சேகரிப்பும் மதிப்பீடும்**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2016 | 54,000,000,000 | 57,424,138,359 | 106% |
| 2015 | 48,000,000,000 | 43,938,771,964 | 92% |




### 2.11.1 தேசக் கட்டுமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழயிப்பட்டவாறு தேசக் கட்டுமான வரிச் சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. **வரி எல்லைக் குறுமட்ட விலக்களிப்பு**

குறித்த சில துறைகளுக்கு (விற்பனைக்கான தயாரிப்பில் உள்நாட்டிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் விவசாய உற்பத்தியின் பிரள்வ தவிர்ந்த),ரூபா.3.75 மில்லியன் அல்லது 25 மில்லியன் தேசக் கட்டுமான வரி பரள்வு விலக்களிப்பின் தற்போதைய எல்லைக் குறுமட்டமானது, 2016 ஏப்பிரல் 01 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் காலாண்டொன்றிற்கு ரூபா. 3 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது.

ii. ின்வரும் விலக்களிப்புக்கள் நீக்கப்படுவதுடன் 2016 நவம்பர் 01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் 2016.05.02. இலிருந்து 2016.07.11 வரையிலான காலப்பகுதிக்கு தேசக் கட்டுமான வரிக்குப் பொறுப்பாகின்றன.:

- தொலைத்தொடர்பு சேவை
- ின்சார வழங்கல் (தேசிய மின்னிணைப்புக்கான வழங்கல் உள்ளடங்கலாக)
- உராய்வு நீக்கிகள் (பெற்றோலியம் மற்றும் பெற்றோல், டீசல் அல்லது மண்ணெய் தவிர்ந்த பெற்றோலிய உற்பத்திகள்)
- விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டமொன்றிற்கான பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் (2016 மே 02 இற்கு முன்னதாக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வீடமைப்புக் கருத்திட்டம் தவிர, 2016 ஜூலை 11 இலிருந்து 2016.10.31 வரையிலான காலப்பதிக்கு).

iii. சிகரட்டுக்களின் இறக்குமதி அல்லது தயாரிப்பு வியாபாரத்தின் புரள்வு மீது ஏற்புடைய தற்போதைய விலக்களிப்பு நீக்கப்படுவதுடன் 2016 நவம்பர் 01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் தேசக் கட்டுமான வரிக்கு ஏற்புடையதாகின்றது.

### 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தின் திரட்டிய தொகையாக ரூபா 20,458 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன், மொத்த வருமான சேகரிப்பில் அதன் பங்களிப்பு 3.19% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 97% ஆகும்.

**அட்டவணை 16 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2016 | 21,000,000,000 | 20,458,175,363 | 97% |
| 2015 | 6,500,000,000 | 6,148,447,689 | 95% |




#### 2.12.1. பொருளாதார சேவைக் கட்டணத்துடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

பொருளாதார சேவைக் கட்டணத்துடன் தொடர்புடைய பின்வரும் மாற்றங்கள் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டன.

(i) பொருளாதார சேவைக் கட்டணத்தின் அறவீடுகளிலிருந்து இலா மீட்டலினை தவிர்ப்பது நீக்கப்பட்டுள்ளது.

(ii) ஆண்டொன்றிற்கான ரூபா 120 மில்லியன் ஆகக்கூடிய பொறுப்பானது நீக்கப்பட்டது.

(iii) வீதாசாரமானது 0.25% இலிருந்து 0.50% இற்கு அதிகரிக்கப்பட்டது.

(iv) 2016 ஏப்பிரலிலிருந்து ஆரம்பமாகும் ஏதேனும் காலப்பகுதிக்கு செலுத்தத்தக்கதான வருமான வரிக்கெதிராக தீர்க்கப்பட வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணம் முன்கொணரப்பட வேண்டிய காலப்பகுதி 5 வருடங்களிலிருந்து 3 வருடங்களுக்கு குறைக்கப்பட்டது. (சென்மதியாகவுள்ள கொடுப்பனவிலுள்ள வருடாந்த மதிப்பீடு உள்ளடங்கலாக).

### 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 28,169 மில்லியனாக இருந்துள்ளதுடன், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 26,205 மில்லியனாக இருந்துள்ளது.

## 2.14 நிறுத்திவைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது)

அரசாங்க பிணை முறிகள் (2015 இல் ரூபா 53,397,715,864/-) மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்தான மீதி மீது ரூபா 44,538,401,573/- தொகையினைக் கொண்டுள்ள வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரியானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 47,839,315,743/- தொகையுடைய வருமானத்தினை பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டு சேகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த வருட வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி வருமானமானது ரூபா 14,572 மில்லியனினால் குறைவடைந்துள்ளது.

## 2.15பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான சேகரிப்பானது ரூபா 1,884/- மில்லியனாக இருந்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,368,077,157/- இனால் வளர்ச்சியடைந்துள்ளமையினைக் காட்டுகின்றது. இது குறித்த ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 984 மில்லியனால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 17 – பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2016 | 900,000,000 | 1,884,498,652 | 209% |
| 2015 | 2,200,000,000 | 831,922,843 | 38% |



## 2.16 மோட்டார் வாகன உரித்துடமை விதிப்பனவு

வாகன உரித்துடமை வதிப்பனவானது 2015 ஆம் அண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மோட்டார் வாகன இறக்குமதி உரிமக் கட்டணத்திற்குப் பதிலாக 2016 ஜனவரி 1 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விதிப்பனவானது பின்வரும் வீதங்களில், ஏதேனும் வங்கியில் சென்மதிக் கடிதமொன்றினைத் திறக்கும் நேரத்திலேயே மோட்டார் வாகன இறக்குமதியினை மேற்கொள்கின்ற ஒவ்வொரு இறக்குமதியாளரினாலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள் – வாகனமொன்றிற்கு ரூபா. 2,000/-

ii. மோட்டார் கார்கள் - வாகனமொன்றிற்கு ரூபா. 15,000/-

iii. ஏனைய அனைத்து வாகனங்கள் - வாகனமொன்றிற்கு ரூபா. 10,000/-

குறித்த ஆண்டு காலப்பகுதியில், வாகன உரித்துடமை விதிப்பனவிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,579 மில்லியனாக இருந்துள்ளதுடன் குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.829 மில்லியன் மிகையாகும்.

### 2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் முத்திரைத் தீர்வையிலிருந்து ரூபா 10,651 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வை மாற்றீடு) சட்டத்தின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை மொத்த சேகரிப்பானது உரிய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. திணைக்களமானது முத்திரைத் தீர்வை இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் மதியுரை மற்றும் மேற்பார்வை விஜயங்களை நடாத்தியதுடன், 2016 ஆம் ஆண்டில் 205 இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. முத்திரைத் தீர்வை தொடர்பில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த முகவர்களின் எண்ணிக்கையானது 9,286 ஆக (2016.09.30 இல் உள்ளவாறு) இருந்துள்ளதுடன், அவற்றுள் 9,278 அட்டவணைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன், இது 100% இணக்கப்பாட்டினை பதிவு செய்துள்ளது.

### 2.18 காணி மீதான மாற்றல் வரி

குறித்த ஆண்டுக்கான காணி மீதான மாற்றீட்டு வரியிலிருந்தான ஆண்டுக்கான சேகரிப்பு ரூபா 22 மில்லியனாக இருந்துள்ளது. 2016 ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் இந்த வரியினை நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.19 2012 இலிருந்து 2016 வரையிலான உள்நாட்டு இறைவரி சேகரிப்பு (வரி ரீதியாக)

அட்டவணை 18 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2012 - 2016– வரி அடிப்படை பகுப்பாய்வு

| வரி வகை | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % |
| வருமான வரி | 157,729 | 35.57 | 199,070 | 40.42 | 191,960 | 37.33 | 256,435 | 47.56 | 238,399 | 37.16 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 14,864 | 3.35 | 6,596 | 1.34 | 6,155 | 1.2 | 6,148 | 1.1 | 20,458 | 3.19 |
| பெறுமதிசேர் வரி | 204,656 | 46.15 | 217,687 | 44.2 | 237,915 | 46.27 | 214,237 | 38.23 | 283,451 | 44.18 |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு | 289 | 0.07 | 592 | 0.12 | 815 | 0.16 | 832 | 0.15 | 1,884 | 0.29 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 1,285 | 0.29 | 1,197 | 0.24 | 2,048 | 0.4 | 1,395 | 0.25 | 738 | 0.12 |
| புரள்வு வரி | 138 | 0.03 | 218 | 0.04 | 472 | 0.09 | 16 | - | 17 | - |
| முத்திரைத் தீர்வை | 6,535 | 1.47 | 6,884 | 1.4 | 7,918 | 1.54 | 11,596 | 2.07 | 10,651 | 1.67 |
| பொருட்கள் சேவைகள் வரி | 12 | - | 16 | - | 3 | - | 0.88 | - | 1.59 | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 4 | - | 2 | - | 14 | - | 12 | - | 8 | - |
| நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீடு | 710 | 0.16 | 751 | 0.15 | 842 | 0.16 | 753 | 0.13 | 259 | 0.04 |
| தேகவ | 57,106 | 12.88 | 59,397 | 12.06 | 65,354 | 12.71 | 67,911 | 12.12 | 84,066 | 13.1 |
| காணி வரி | - | - | 97 | 0.02 | 579 | 0.11 | 1,066 | 0.19 | 23 | - |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | - | - | - | - | - | - | - | - | 1,579 | 0.25 |
| குடியகல்வு வரி | - | - | - | - | - | - | - | - | 11 | - |
| சமூகப் பொறுப்பு வரி | 127 | 0.03 | 32 | 0.01 | 85 | 0.02 | 20 | - | 1 | - |
| மொத்த சேகரிப்பு | **443,455** | **100** | **492,539** | **100** | **514,160** | **100** | **560,422** | **100** | **641,546** | **100** |

**வரைபு 10**

**உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2012 - 2016 – வரி அடிப்படை பகுப்பாய்வு**



## Distribution of Staff and Revenue Amoung The Assessing Divisions as at 31-12-2016

| Assessing Divisions | Staff | | | | | | Revenue (Rs. Mn) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | CIR | SDCIR/ DCIR | ACIR | STO/TO | Other | Total | INCOME TAX/SRL | PAYE | E.S.C | VAT/ GST/ O.VAT | NBT | TT / B&G / Other | STL | SD/LT | TOTAL |
| Unit 01 & 02 | 2 | - | 20 | - | 14 | 36 | 886.68 | - | 0.09 | 5.36 | 2.08 | - | - | - | 894.21 |
| Unit 04 | 1 | - | 10 | - | 11 | 22 | 1,279.24 | 348.41 | 199.86 | 1,279.16 | 767.63 | 1.58 | - | - | 3,875.87 |
| Unit 05 | 1 | - | 10 | - | 13 | 24 | 1,815.63 | 578.73 | 255.15 | 1,491.18 | 606.61 | 0.15 | - | - | 4,747.45 |
| Unit 10 | 2 | 1 | 17 | - | 16 | 36 | 10,933.22 | 2,930.29 | 2,591.56 | 15,583.62 | 5,093.87 | 0.44 | - | - | 37,133.00 |
| Unit 13 | 1 | - | 20 | - | 11 | 32 | 537.82 | 126.41 | 124.07 | 1,096.78 | 812.44 | 3.65 | - | - | 2,701.18 |
| Unit 14 | 1 | - | 15 | - | 16 | 32 | 508.16 | 102.07 | 67.15 | 685.10 | 446.91 | 0.03 | - | - | 1,809.42 |
| Unit 15 | 1 | 1 | 13 | - | 15 | 30 | 484.68 | 70.44 | 74.42 | 610.26 | 410.92 | 0.53 | - | - | 1,651.26 |
| Unit 16 | 1 | - | 17 | - | 10 | 28 | 704.01 | 119.51 | 183.71 | 1,592.96 | 762.49 | - | - | - | 3,362.68 |
| Unit 17 | 1 | 1 | 15 | - | 12 | 29 | 1,453.17 | 623.47 | 264.50 | 4,067.10 | 1,408.86 | - | - | - | 7,817.11 |
| Unit 18 | 1 | - | 18 | - | 6 | 25 | 1,891.39 | 680.44 | 247.09 | 2,245.77 | 1,175.11 | - | - | - | 6,239.80 |
| Unit 4 A | 1 | - | 13 | - | 11 | 25 | 684.61 | 168.08 | 83.56 | 582.02 | 365.83 | 1.24 | - | - | 1,885.34 |
| Unit 4 B | 1 | - | 14 | - | 10 | 25 | 571.86 | 132.13 | 92.77 | 1,122.60 | 341.18 | 0.09 | - | - | 2,260.63 |
| Unit 5 A | 1 | - | 15 | - | 10 | 26 | 1,649.98 | 487.30 | 328.79 | 1,589.86 | 683.27 | 1.77 | - | - | 4,740.98 |
| Unit 5 B | 2 | 1 | 15 | - | 18 | 36 | 8,935.57 | 602.26 | 201.56 | 493.93 | 75.77 | 0.00 | - | - | 10,309.10 |
| Unit 5 C | 1 | - | 13 | - | 11 | 25 | 814.28 | 157.39 | 91.27 | 682.11 | 357.68 | 0.34 | - | - | 2,103.09 |
| Unit 5 D | 1 | 1 | 15 | - | 11 | 28 | 695.91 | 265.27 | 103.44 | 1,137.82 | 463.41 | 0.13 | - | - | 2,665.98 |
| Unit 5 E | 1 | - | 14 | - | 12 | 27 | 1,219.98 | 306.20 | 193.65 | 635.72 | 427.51 | - | - | - | 2,783.07 |
| Unit 5 F | 1 | - | 13 | - | 9 | 23 | 485.97 | 175.13 | 111.72 | 615.96 | 291.63 | 0.01 | - | - | 1,680.42 |
| Unit 6 A | 2 | 1 | 12 | - | 16 | 31 | 14,171.85 | 1,832.92 | 2,855.13 | 9,860.20 | 4,848.82 | 0.19 | - | - | 33,569.10 |
| Unit 6 B | 2 | - | 14 | 1 | 12 | 29 | 11,673.54 | 3,614.04 | 1,914.00 | 9,941.22 | 3,902.03 | 0.60 | - | - | 31,045.43 |
| Unit 6 C | 2 | 2 | 16 | - | 17 | 37 | 39,552.89 | 4,869.53 | 3,166.91 | 50,171.46 | 8,265.05 | 0.07 | - | - | 106,025.90 |
| Unit 7 A | 2 | 2 | 11 | 1 | 18 | 34 | 7,100.41 | 2,164.25 | 1,583.84 | 15,707.21 | 4,466.48 | 0.03 | - | - | 31,022.21 |
| Unit 7 B | 2 | 1 | 12 | 1 | 15 | 31 | 7,105.10 | 1,062.52 | 943.78 | 6,298.70 | 1,719.74 | - | - | - | 17,129.84 |
| Unit 8 A | 2 | - | 16 | - | 17 | 35 | 16,191.49 | 3,140.13 | 2,154.53 | 15,253.98 | 2,974.52 | 0.08 | - | - | 39,714.73 |
| Unit 8 B | 1 | 2 | 1 | 1 | 13 | 18 | 5,711.62 | 1,546.84 | 1,008.13 | 10,082.26 | 2,323.80 | 3.40 | - | - | 20,676.07 |
| WHT | 1 | - | 10 | - | 4 | 15 | 56,972.15 | - | - | - | - | - | - | - | 56,972.15 |
| PAYE | 1 | - | 9 | - | 12 | 22 | 2,566.98 | 153.40 | - | - | - | - | 550.06 | - | 3,270.44 |
| Betting & Gaming | 1 | - | 4 | - | 2 | 7 | - | - | - | - | - | 1,884.50 | - | - | 1,884.50 |
| Stamp Duty | 1 | 2 | 16 | - | 13 | 32 | - | - | - | - | - | - | - | 8,505.42 | 8,505.42 |
| VAT | 2 | - | 17 | - | 10 | 29 | - | - | - | 2,645.61 | - | - | - | - | 2,645.61 |
| Colombo Central | 1 | 2 | 18 | - | 16 | 37 | 895.14 | - | 37.13 | 333.13 | 590.80 | - | - | - | 1,856.20 |
| Colombo City | 1 | 1 | 20 | - | 20 | 42 | 777.43 | - | 45.21 | 267.87 | 657.00 | - | - | - | 1,747.51 |
| Colombo South | 1 | 1 | 16 | - | 17 | 35 | 1,078.96 | - | 27.59 | 388.74 | 197.70 | - | - | - | 1,692.98 |
| Maharagama East | 1 | - | 25 | - | 17 | 43 | 440.47 | - | 12.08 | 349.40 | 369.73 | - | - | - | 1,171.69 |
| Maharagama West | 1 | - | 22 | - | 13 | 36 | 594.01 | - | 9.41 | 240.43 | 298.36 | - | - | - | 1,142.21 |
| Anuradhapura | 1 | - | 21 | - | 20 | 42 | 366.95 | - | 8.77 | 113.00 | 290.61 | - | - | - | 779.33 |
| Badulla | 1 | 1 | 14 | - | 19 | 35 | 330.51 | - | 13.37 | 77.53 | 252.17 | - | - | - | 673.58 |
| Batticaloa | 1 | - | 11 | - | 15 | 27 | 171.15 | - | 1.43 | 50.46 | 176.77 | - | - | - | 399.81 |
| Dambulla | 1 | 1 | 25 | - | 15 | 42 | 175.70 | - | 8.30 | 56.35 | 200.79 | - | - | - | 441.14 |
| Galle | 1 | - | 27 | - | 20 | 48 | 233.08 | - | 16.01 | 99.19 | 227.19 | - | - | - | 575.47 |
| Gampaha | 1 | 1 | 23 | - | 16 | 41 | 553.32 | - | 26.03 | 366.30 | 589.10 | - | - | - | 1,534.75 |
| Jaffna | 1 | - | 3 | - | 16 | 20 | 110.80 | - | 0.07 | 89.73 | 176.95 | - | - | - | 377.55 |
| Kaluthara | 1 | - | 21 | - | 23 | 45 | 223.11 | - | 21.15 | 134.95 | 223.97 | - | - | - | 603.17 |
| Kandy | 1 | 1 | 38 | - | 22 | 62 | 572.10 | - | 16.64 | 212.88 | 355.24 | - | - | - | 1,156.86 |
| Kegalle | 1 | 1 | 14 | - | 21 | 37 | 180.45 | - | 4.64 | 83.93 | 127.94 | - | - | - | 396.97 |
| Kurunagala | 1 | 1 | 33 | - | 20 | 55 | 364.98 | - | 21.56 | 131.73 | 319.38 | - | - | - | 837.67 |
| Matara | 1 | 1 | 21 | - | 19 | 42 | 298.68 | - | 28.55 | 62.68 | 289.05 | - | - | - | 678.97 |
| Negombo | 1 | 1 | 21 | - | 15 | 38 | 452.28 | - | 27.55 | 168.74 | 345.51 | - | - | - | 994.09 |
| Nuwaraeliya | 1 | 1 | 13 | - | 14 | 29 | 200.57 | - | 9.39 | 44.40 | 183.76 | - | - | - | 438.11 |
| Ratnapura | 1 | 1 | 17 | - | 15 | 34 | 412.19 | - | 34.75 | 53.07 | 281.32 | - | - | - | 781.33 |
| **Sub Total** | **60** | **29** | **808** | **4** | **718** | **1,619** | **205,030.09** | **26,257.18** | **19,210.34** | **158,802.49** | **49,146.98** | **1,898.82** | **550.06** | **8,505.42** | **469,401.37** |

| | |
|---|---|
| **VAT(Import)** | **115,338.99** |
| **NBT(Import)** | **28,463.19** |
| **Treasury Transfer** | **7,268.99** |
| **Refunds** | **(570.47)** |
| **Adjustments,Unclasified Revenue,Dishonored Cheques and Others** | **21,644.68** |
| **Net Collection (Including Stamp Duty & NBT 1/3 Transferred to Provincial Councils)** | **641,546.76** |

# அத்தியாயம் 3

# செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் மொத்த செலவினமானது ரூபா 4,061 மில்லியனாக இருந்துள்ளதுடன், இது முன்னைய ஆண்டுத் தொகையான ரூபா 4,437 மில்லியனுடன் ஒப்பிடுகையில்,8.47% வீழ்ச்சியனைப் பதிவு செய்துள்ளது. மொத்த செலவினத்தில் 69.96% அல்லது ரூபா 2,841 மில்லியனானது மீண்டுவரும் செலவினத்திற்காக செலவிடப்பட்டது. 2015 இல் இச் செலவினமானது ரூபா 2,428 மில்லியனாக இருந்துள்ளது. வேதனாதிகள் மீதான செலவினமானது 11.28% இனால் அதிகரித்துள்ளதுடன், இது 2015 இல் ரூபா 1,783 மில்லியனாக இருந்துள்ளது. இது மொத்தச் செலவினத்தின் 48.87% இனையும் மீண்டுவரும் செலவினத்தில் 69.84% இனையும் கொண்டிருந்ததுடன், தனியொரு வகையீட்டுக்கான மிகப் பெரிய தொகையாகவும் அமைந்திருந்தது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், மூலதனச் செலவினமானது 39.27% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளதுடன்,இது 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,220 மில்லியனைஅடையப் பெற்றிருந்தது. திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினமானது, 30.04% இனைப் பிரதிபலிக்கின்றது.

திணைக்களமானது திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் அமுலாக்கலுக்காக குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 1,108 மில்லியனை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.1 **2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு**

**அட்டவணை19:- மொத்த செலவினம் – 2014, 2015 மற்றும் 2016**

| விபரணம் | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|
| | (ரூ.'000) | % | (ரூ.'000) | % | (ரூ.'000) | % |
| <u>**மீண்டெழும் செலவினம்**</u> | | | | | | |
| வேதனாதிகள் | 1,413,734 | 45.78% | 1,783,351 | 40.19% | 1,984,484 | 48.87% |
| பிரயாணச் செலவுகள் | 17,722 | 0.57% | 22,337 | 0.50% | 33,172 | 0.82% |
| வழங்கல்கள் | 103,684 | 3.36% | 86,449 | 1.95% | 107,990 | 2.66% |
| பராமரிப்பு | 63,671 | 2.06% | 47,768 | 1.08% | 52,562 | 1.29% |
| ஒப்பந்த சேவைகள் | 372,162 | 12.05% | 453,239 | 10.21% | 624,199 | 15.37% |
| இடமாற்றல்கள் | 31,438 | 1.02% | 35,268 | 0.79% | 38,752 | 0.95% |
| **உப மொத்தம்** | **2,002,411** | **64.85%** | **2,428,412** | **54.73%** | **2,841,159** | **69.96%** |
| <u>**மூலதனச் செலவினம்**</u> | | | | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 101,614 | 3.29% | 73,624 | 1.66% | 29,425 | 0.72% |
| மூலதன ஆதனங்கள் சுவீகாரம் | 49,343 | 1.60% | 31,820 | 0.72% | 27,130 | 0.67% |
| திறன் கட்டியெழுப்புதல் | 127,793 | 4.14% | 385,170 | 8.68% | 55,031 | 1.36% |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 806,802 | 26.13% | 1,518,108 | 34.21% | 1,108,385 | 27.29% |
| **உப மொத்தம்** | **1,085,552** | **35.15%** | **2,008,722** | **45.27%** | **1,219,971** | **30.04%** |
| **மொத்தம்** | **3,087,963** | **100.00%** | **4,437,134** | **100.00%** | **4,061,130** | **100.00%** |







## 3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

2016 இல் திணைக்களத்தின் மொத்த செலவினமானது, ரூபா 4,061 மில்லியனாக இருந்துள்ளதுடன், சேகரிக்கப்பட்ட வருமானமானது ரூபா 641,546.75 மில்லியனாக இருந்துள்ளது. ஆகையால், உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரமானது (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்கும் சேகரிக்கப்பட்ட வருமானம்) 158:1 ஆகும். வேறு முறையில் கூறுவதாயின், ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவானது 63 சதமாக இருந்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி என்பன நீங்கலாக ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவு 84 சதமாக இருந்துள்ளது. (முன்னைய ஆண்டில் இத்தொகைகள் முறையே 79 சதம் மற்றும் 98 சதமாக இருந்துள்ளது).

அட்டவணை 20 ஆனது 2014 இலிருந்து 2016 வரையிலான காலப்பகுதிக்குரிய வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்புச் செலவு என்பவற்றின் வகையீட்டினை வழங்குகின்றது.

**அட்டவணை 20- வருமான சேகரிப்பு,மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவு(ரூபா.மில்)**

| விபரணம் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 191,960.05 | 256,434.94 | 238,398.61 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,154.51 | 6,148.45 | 20,458.17 |
| பெறுமதிசேர் வரி | 237,915.43 | 214,236.99 | 283,451.51 |
| தேசக் கட்டுமான வரி | 65,353.98 | 67,911.06 | 84,066.53 |
| பற்று வரி | 815.18 | 831.92 | 1,884.50 |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 2,048.05 | 1,394.92 | 737.66 |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 472.18 | 15.77 | 16.64 |
| புரள்வு வரி | 7,918.14 | 11,595.88 | 10,650.97 |
| முத்திரைத் தீர்வை | 3.46 | 0.89 | 1.59 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 13.77 | 11.63 | 8.09 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 841.83 | 753.31 | 258.80 |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு | 579.47 | 1,066.64 | 22.66 |
| காணி வரி | - | - | 1,579.13 |
| சமூகப் பொறுப்புடமை அறவீடு | - | - | 11.05 |
| **மொத்த சேகரிப்பு** | 84.66 | 19.96 | 0.84 |
| **வருமான சேகரிப்பு** | **514,160.71** | **560,422.36** | **641,546.75** |

| | | | |
|---|---|---|---|
| **செலவினம்** | | | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| வேதனாதிகள் | 1,413.73 | 1,783.35 | 1,984.48 |
| பிரயாணச் செலவுகள் | 17.72 | 22.34 | 33.17 |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 103.68 | 86.45 | 107.99 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 63.67 | 47.77 | 52.56 |
| சேவைகள் | 372.16 | 453.24 | 624.20 |
| இடமாற்றல்கள் | 31.44 | 35.27 | 38.75 |
| **மூலதன செலவினம்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 101.61 | 73.62 | 29.42 |
| கொள்ளல்கள் | 49.34 | 31.82 | 27.13 |
| திறன் கட்டியெழுப்புதல் | 127.79 | 385.17 | 55.03 |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 806.8 | 1,518.11 | 1,108.39 |
| **மொத்த செலவினம்** | **3,087.94** | **4,437.14** | **4,061.12** |
| | | | |
| **100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.6** | **0.79** | **0.63** |
| **பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக 100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.79** | **0.98** | **0.84** |

## 3.3 உள்ளக கணக்காய்வு

அனைத்து கொடுப்பனவுகள், நாளாந்த வாகனம் பயணிக்கும் தூர அட்டவணைகள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்படுபவை), கொடுப்பனவு தாள்கள், மதிப்பாய்வு சபையின் வருடாந்த அறிக்கைகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் வங்கி கணக்கிணக்கம் போன்றவற்றினை ஆய்வு செய்தல் உள்ளடங்கலான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் மேலாக, மதிப்பிழந்த காசோலைகள் மீதான வரவேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்வினை மேற்கொள்ளல், வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பான மீள் நிதியிடல்கள், கட்டுநிதி கணக்கு மற்றும் கட்டுநிதி காசுக் கணக்கினை செவ்வை பார்த்தல் என்பன உள்ளக கணக்காய்வு கிளையினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

# அத்தியாயம் 4

# தவறவிடப்பட்ட வரிகள்

## 4.1 தவறவிடப்பட்ட வரிகள்

அட்டவணை 21 ஆனது 2016.12.31 இலுள்ளவாறான தவறவிடப்பட்ட வரி தொகைகள், தண்டப் பணங்கள் மற்றும் சேகரிக்கத்தக்க தொகை என்பவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 21 - 2016.12.31 இலுள்ளவாறான நிலுவையிலுள்ள வரிகளின் பகுப்பாய்வு**

| வரி வகை | தவறவிடப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா | தண்டப்பணம் ரூபா | தண்டப்பணம் நீங்கலான பிணக்கு வரி (ரூபா) | பிணக்கு வரிகளுடன் தொடர்புடைய தண்டப்பணம் | சேகரிக்கத்தக்க வரி (ரூபா) | சேகரிக்கத்-தக்க தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| வருமான வரி | 101,493,513,132 | 58,681,797,527 | 94,413,477,489 | 56,147,950,143 | 7,080,035,643 | 2,533,847,384 |
